ADIC/IW/981/6-7-26

web

S/-


அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

சமவாய்ப்பு பிரிவு


**சுற்றறிக்கை**

பொருள் : கல்வி உதவித்தொகை பிரிவு - 2026-2027-ஆம் கல்வியாண்டில் பல்வேறு துறைகளில் கல்வி பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் (BC/MBC/DNC) வகுப்பை சார்ந்த மாணாக்கர்கள் கல்வி உதவித்தொகை வேண்டி புதுப்பித்தல் மற்றும் புதியதாக விண்ணப்பித்தல்-தொடர்பாக

*******

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பல்வேறு துறைகளில் கல்வி பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், மற்றும் சிறுபான்மையினர் வகுப்பை சார்ந்த மாணாக்கர்கள் 2026-27-ஆம் கல்வி ஆண்டிற்கான போஸ்ட்மெட்ரிக் கல்வி உதவித்தொகை பெற புதுப்பித்தல் (Renewal) மற்றும் புதியதாக (Fresh) விண்ணப்பிக்க தங்களது சாதி மற்றும் வருமான சான்றிதழ்களில் TN- 000 000 000 000 00 பதினான்கு இலக்க எண் கொண்ட சாதி சான்றிதழ் மற்றும் வருமான சான்றிதழ் பெற வேண்டும். புதுப்பித்தல் மாணாக்கர்கள் சென்ற கல்வியாண்டில் UMIS இணையதளத்தில் விண்ணப்பித்ததுபோல் இக்கல்வியாண்டிலும் விண்ணப்பிக்க வேண்டும். மேலும் மாணாக்கர்கள் பல்கலைக்கழக இணையதளத்தில் (annamalai university.ac.in) கல்வி உதவித்தொகை விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து துறைத்தலைவர் பரிந்துரையோடு கல்வி உதவித்தொகை விண்ணப்பத்தை "H1" பிரிவில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இக்கல்வி உதவித்தொகை பெற மாணாக்கர்களுக்கு புதுப்பித்தல் (Renewal) 31.08.26-ஆம் தேதியும் புதியதாக (Fresh) மாணாக்கர்கள் விண்ணப்பிக்க 30-09-26 ஆம் தேதியும் கடைசி நாளாக தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும் முதலாம் ஆண்டு மாணாக்கர்கள் தங்கள் துறையின் மூலம் UMIS இணையதளத்தில் தங்களது விவரத்தை பதிவேற்றம் செய்து தங்களுக்கான UMIS எண் பெற்றிருக்க வேண்டும். மாணாக்கர்கள் உடனடியாக விண்ணப்பத்தை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது

R. Singaravel

பதிவாளர் (பொ)

24/6/26

பெறுதல் :

1. புல முதல்வர்கள்
2. அனைத்துத் துறை தலைவர்கள் (தகவல் பலகைக்கு மற்றும் வகுப்புகளில் அறிவித்திட வேண்டப்படுகிறது)
3. இயக்குநர், அண்ணாமலைப் பல்கலைக்கழக எண்ணியல் தகவல் மையம் (இச்சுற்றறிக்கை மற்றும் படிவத்தை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யவும்)
4. ஒருங்கிணைப்பாளர்கள், சமவாய்ப்பு பிரிவு
5. விடுதி ஒருங்கிணைப்பாளர் & அனைத்து விடுதி காப்பாளர்கள் (அனைத்து விடுதி அறிவிப்பு பலகையில் விளம்பரப்படுத்த வேண்டப்படுகிறது).

நகல்:

1. துணைவேந்தர் குழு நேர்முக செயலாளர்
2. பதிவாளர் நேர்முக உதவியாளர்
3. இணை பதிவாளர் நேர்முக உதவியாளர்
4. அலுவலக கோப்பு